**SC NO.19/2013** **Date:14.02.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. பன்னீர்செல்வம் என்ற Pw11 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. பன்னீர்செல்வம்**

**த/பெ, - திரு. ரத்தினகாலத்தி**

**வயது - 69/2025**

**தொழில் - கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு அடைந்துவிட்டேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு காலத்தில் நான் செவிலிமேடு கிராம்த்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். என்னிடம் காட்டடப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ–8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 02.09.2009 ஆம் தேதி காஞ்சி தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண் 809/2009 பிரிவு அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி ஸ்ரீதர் வயது 32 தந்தை பெயர் தனபால் என்பவரிடம் விசாரிக்க வேண்டி உங்களையும் உங்கள் கிராம உதவியாளரும் அழைத்ததன் பேரில் நானும் எனது உதவியாளரும் காஞ்சி தாலுகா காவல் நிலையம் சென்றீர்கள் என்றும் எங்கள் முன்னிலையில் காலை 10 மணிக்கு காஞ்சி காவல்

நிலைய ஆய்வாளர் அவர்கள் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்த போது எதிரியை எவ்வித துன்புறுத்தலும் அச்சுறுத்தலும் இன்றி அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்துவிட்டு தற்பொழுது குற்றவாளிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல.

குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை